ந.க.எண்.334 /2005/இ2

பேரூராட்சிகள் ஆணையரகம்
சென்னை
நாள் : 18.8.2008

**சுற்றறிக்கை**

பொருள் : பேரூராட்சிகளின் நிர்வாகம்—சொத்து வரி சீராய்வு—அனுமதிபெறாத கட்டிடங்களுக்கு சொத்துவரி விதித்தல் —அறிவுரை வழங்கப்பட்டது.

பார்வை :

1) அரசாணை எண் 150, நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 12.11.2007
2) அரசு கடிதம் எண் 38279/தேர்தல்/2006.2 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 1.2.2008
3) இவ்வாணையரக கடிதம் நக..எண் 334/2005/இ2 நாள் 17.03.08
4) அரசு ஆணை (நிலை) எண் 110, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 23.6.2008
5) அரசு கடித எண் 38279/தேர்தல்/06.4 நாள் 25.6.2008
6) இவ்வாணையரக சுற்றறிக்கை ந.க. 334/2005 இ 2 நாள 12.02.08 மற்றும் 2.7.2008

பேரூராட்சிகளில் 1.4.2008 முதல் சொத்து வரி சீராய்வு மேற்கொள்ள அரசாணை வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வாணையரகத்தின் மூலம் அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. சொத்து வரி சீராய்வுப் பணிகள் பெரும்பாலான பேரூராட்சிகளில் இதுவரை முடிக்கப்படவில்லை என ஆய்வின் போது தெரிய வந்தது. மேலும் பெரும்பாலான பேரூராட்சிகளில் அனுமதி பெறாத கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிப்பதில்லை என இவ்வாணையரகத்தின் கவனத்திற்கு வந்துள்ளது.

பொதுச் சீராய்வின்போது அனுமதியற்ற அங்கீகரிக்கப்படாத கட்டிடங்களுக்கு அக்கட்டிடங்கள் அமைந்துள்ள தெருக்கள் உள்ளிட்ட பேரூராட்சியின் பகுதிகள் முழுமைக்கும் பேரூராட்சியின் மூலம் சாலை, வடிகால், தெருவிளக்கு, குடிநீர் போன்ற அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு அந்த வீடுகளுக்கும் வழங்கப்படுகின்றன. எனவே, அனுமதி பெறாத கட்டிடங்களாயினும் அவை பேரூராட்சி வழங்கும் அனைத்து வசதிகளையும் துய்த்து வருகின்றன. எனவே, அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகளுக்கு முரணாக கட்டியமைக்காகவும், அல்லது 1971ம் வருட தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் உரிய சட்டப் பிரிவுகள் மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும விதிகளின்படியும் எடுக்கப்படும் சட்டப்படியான நடவடிக்கைகளுக்கு குந்தகமின்றியும், அவ்வாறு சொத்துவரி விதிப்பதால் அனுமதி பெறாத கட்டிடங்கள் முறைப்படுத்தப்பட்டதாக அல்லது வரன்முறை செய்யப்பட்டதாக கருதப்பட மாட்டாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு அத்தகைய கட்டிடங்களுக்கு உரிய முன் தேதியிட்டு சொத்து வரி விதிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

இவ்வாறு வரி விதிப்பு மேற்கொள்ளும் முன்னர் அனுமதி பெறாமல் மனை உரிமையாளர்கள் கட்டியுள்ள குடியிருப்பு தொழிற்சாலை/மற்றும் வணிக கட்டிடங்களின் எண்ணிக்கை மற்றும் ஆட்சேபகரமற்ற ஆக்கிரமிப்பு இடங்களில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் இவற்றின் விவரங்கள் தனியே சேகரித்து தொகுத்தபின் சொத்துவரி விதிப்பிற்குட்படுத்தலாம். எவ்வாறாயினும் அடிமனைக்கு உரிமையுள்ளவர் பெயரில் பத்திரப்பதிவு ஆவணங்களின் அடிப்படையில் சொத்துவரி விதிக்கப்பட வேண்டும். சிறப்பு அறிவிப்புகளில் கீழ்க்கண்ட நிபந்தனைகள் சேர்க்கப்பட வேண்டும்.

1. அடிமனை நீங்கலாக மேற்கட்டிடத்திற்கு (Superstructure) மட்டுமே வரி விதிக்கப்படுகிறது.

2. சொத்து வரி விதிப்பதால் அனுமதியற்ற கட்டுமானம்/கட்டிடம் முறைப்படுத்தப்பட்டதாக கருதப்பட மாட்டாது.

3. அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டிடங்களை 1920ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகள் மற்றும் மலை வாழ் இடங்களின் கட்டிட விதிகள் ஆகியவற்றின் கீழ் உரிய ஷரத்துக்களின்படி நடவடிக்கை மேற்கொண்டு, இடித்து அப்புறப்படுத்தப்படும்.

நீர்வழித் தடம் மற்றும் ஏரிபுறம்போக்கு முதலிய நீர்நிலைகள் மற்றும் நீர் நிலைகள் சார்ந்த இடங்கள் மற்றும் அரசு நிலங்களில் கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு சொத்துவரி செய்யப்படலாகாது. புறம்போக்கு/கோவில் நிலங்கள் மற்றும் தனியார் நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள கட்டிடங்களில் வசிப்பவர்கள் நிர்ணயித்துள்ள உறுதிமொழிப் பத்திரத்தில் நோட்டரி பப்ளிக் முன் கையொப்பம் இட்டு வரி மதிப்பீடு செய்ய கோரும் விண்ணப்பத்தினை (மாதிரி இணைக்கப்பட்டுள்ளது) பெற்று வரிவிதிப்பு செய்ய வேண்டும். நோட்டரி பப்ளிக் சான்றுரைத்த உறுதி மொழிப் பத்திரத்துடன் இல்லாத விண்ணப்பங்களுக்கு வரிவிதிப்பு செய்யலாகாது.

இப்பொருள் தொடர்பான விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளவும் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை 31.08.2008க்குள் முடிவான அறிக்கையினை அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் சொத்துவரி சீராய்வுப் பணிகளை 31.0.8.2008க்குள் முடித்து பணிமுடிவு அறிக்கையினை தவறாது அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஒம்/– கே.கோபால்**
ஆணையர்

பெறுநர்

அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்
நகல் அனைத்துப் பிரிவு கண்காணிப்பாளர்கள்
நகல் இ 2 (இ.கோ)